வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-ராமசுப்பிரமணியன்

தேதி 03.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாளை மறுநாள் நடைபெற உள்ள, 70 உறுப்பினர் டெல்லி சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது.

பிரயாக் ராஜ் மகா கும்பமேளாவில், இதுவரை 36 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர்.

வீராம்பட்டினம் பகுதியில் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி உள்ளிட்ட வசதிகளை அமைக்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

பாரதிதாசன் மகளிர் கல்லூரியில், முன்னாள் மாணவிகள் சங்கத்தின், இலவச காலை உணவு திட்டத்தை, உயர்கல்வி துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் இன்று தொடக்கி வைத்தார்.

டெல்லி-தேர்தல்

நாளை மறுநாள் நடைபெற உள்ள, 70 உறுப்பினர் டெல்லி சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது. கடைசி நாளான இன்று அனைத்து கட்சிகளின் தலைவர்கள்

மற்றும் வேட்பாளர்கள், பேரணிகளை நடத்தியும், வீடு வீடாகச் சென்றும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். மத்திய உள்துறை அமைச்சரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு அமித் ஷா, பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், டெல்லியில் 10 ஆண்டுகால ஆம் ஆத்மி ஆட்சியினால், ஊழலும் மாசுபட்ட குடிநீருமே மக்களுக்கு கிடைத்திருப்பதாக கூறினார். டெல்லியில் முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் தான், 100 யூனிட் இலவச மின்சாரம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டதாக, டெல்லி பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு தேவேந்திர யாதவ் கூறினார். ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் திரு அரவிந்த் கெஜரிவால் இன்று மதியம் டெல்லியில் சாலை பவனி நடத்தினார்.

இதற்கிடையே, தமிழகத்தில் இடைத் தேர்தல் நடைபெற உள்ள ஈரோடு சட்டமன்ற தொகுதியிலும் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது.

தேர்தல் நடைபெறும் எல்லா தொகுதிகளிலும், வாக்குப் பதிவிற்கு முந்தைய 48 மணி நேரத்தில் கருத்துக் கணிப்புகளுக்கு தடை விதிக்கப்படுவதாக, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்களித்த

கையோடு வாக்காளர்களின் கருத்துக்களை சேகரித்து கணிப்பு வெளியிடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

*மோடி-மாணவர்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் மாணவர்களுடன் கலந்துரையாடல் நடத்தினார். 10-ஆம் வகுப்பில் வெற்றிக்கு உத்தரவாதம் இல்லாத மாணவர்கள், 9-ஆம் வகுப்பை தாண்ட முடியாமல், டெல்லியில் உள்ள ஆம்-ஆத்மி அரசு தடுப்பதாக தாம் கேள்விப் பட்டதாகவும், மாணவர் தேர்ச்சி விகிதம் குறைந்தால், அரசு மீதான மதிப்பு பாதிக்கப்படும் என்பதே இதற்கு காரணம் என்றும் அவர் கூறினார்.

*மோடி-டாண்டன்*

திரிவேணி இசைத் தொகுப்பிற்காக, கிராமி விருது வென்றுள்ள, இசைக் கலைஞர் சந்திரிகா டாண்டனுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இசைக் கலைஞர், தொழில் முனைவர் மற்றும் அறக்கொடையாளர் என்ற முறையில், பலருக்கு உணர்வூக்கமாகத் திகழும் சந்திரிகா டாண்டன், இந்திய கலாச்சாரம் மீது வைத்துள்ள பற்று பாராட்டத் தக்கது என்று, சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறி உள்ளார்.

*மோடி-பயிற்சி*

படித்த இளைஞர்களுக்கு தொழில் நிறுவனங்களில் நேரடி பயிற்சி வாய்ப்பு வழங்குவதற்கான பிரதமரின் இன்டர்ன்ஷிப் திட்டத்தின் கீழ்

வரும் நிறுவனங்களால் முதல் கட்டமாக வழங்கப்பட்ட 80 ஆயிரம் பயிற்சி வாய்ப்புகளில், சுமார் 28 ஆயிரம் வாய்ப்புகளை இளைஞர்கள் ஏற்றுள்ளதாகவும், 2-ஆம் கட்டமாக பயிற்சி வாய்ப்புகளை வழங்கும் நடைமுறைகளில் நிறுவனங்கள் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் மத்திய கார்ப்பரேட் விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு ஹர்ஷ் மல்கோத்ரா இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். இத்திட்டம், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கப்பட்டது முதல், 6 லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப் பட்டுள்ளதாகவும், ஆரம்பத்தில் மொத்தம் 1 லட்சத்து 27 ஆயிரம் பயிற்சி வாய்ப்புகள் இளைஞர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கும்பமேளா

உலகிலேயே அதிக அளவில் மக்கள் கூடும் விழாவாக திகழும் பிரயாக் ராஜ் கும்பமேளா, கடந்த மாதம் 13-ஆம் தேதி தொடங்கியது முதல் இதுவரை 36 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர். இன்று வசந்த பஞ்சமி தினத்தை ஒட்டி, நண்பகல் 12 மணி வரை, 1 கோடியே 25 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் புனித நீராடியதாகவும், தொடர்ந்து கூட்டம் கூட்டமாக பக்தர்கள் வந்த வண்ணம் இருப்பதாகவும், தகவல் வெளியாகி உள்ளது. பக்தர்களின் வசதிக்காக,

பாதுகாப்பு உள்ளிட்ட எல்லா ஏற்பாடுகளும் விரிவான முறையில் செய்யப்பட்டுள்ளன. விழாப் பகுதியின் அனைத்து 25 மண்டலங்களிலும், மொத்தம் 3 ஆயிரம் சிசிடிவி கேமராக்கள் மூலம் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. எந்த தவறும் நேராத விதத்தில் நிலைமைகளை பராமரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக, அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வரும் 26-ஆம் தேதி வரை நடைபெறும் மகா கும்பமேளாவில், மகரசங்கராந்தி, மவுனி அமாவாசை, வசந்த பஞ்சமி, மாக பூர்ணிமா, மகா சிவராத்திரி ஆகிய நாட்கள், அமிர்தக் குளியலுக்கான முக்கிய நாட்களாக கருதப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

*அரியாங்குப்பம் குடிநீர்*

அரியாங்குப்பம் தொகுதிக்கு உட்பட்ட வீராம்பட்டினம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்க, நபார்டு வங்கியின் நிதி உதவி மூலமான ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் கீழ், 10 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி உள்ளிட்ட வசதிகளை அமைக்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லடசுமி நாராயணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, மற்றும், அதிகாரிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர். 19.22 கோடி ரூபாய்

மதிப்பிலான இத்திட்டத்தினால், பொது மக்கள் சுமார் 18 ஆயிரத்து 600 பேர் பயன்பெறுவார்கள் என்று அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கா￼லை உணவு*

புதுச்சேரி பாரதிதாசன் மகளிர் கல்லூரியில், முன்னாள் மாணவிகள் சங்கத்தின், அமுதம்-இலவச காலை உணவு திட்டத்தை, உயர்கல்வி துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் இன்று தொடக்கி வைத்தார். முன்னாள் மாணவிகள் சங்க நிர்வாகிகளுக்கு தமது சொந்த செலவில் 1 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கப்படும் என அவர் தமது உரையில் அறிவித்தார். பாரதிதாசன் மகளிர் கல்லூரி, சரித்திரம் படைத்த கல்லூரி என்றும், இக்கல்லூரியை மேம்படுத்த, இயன்ற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். அமைச்சரின் உரையில் இருந்து சில பகுதிகள்..................

(வாய்ஸ்)

பாரதிதாசன் மகளிர் கல்லூரியின் காலை உணவு திட்ட தொடக்க விழாவில், உயர் கல்வித் துறை இயக்குநர் திரு அமன் சர்மா கல்லூரி முதல்வர் திரு வீர மோகன், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.

*அட்டெண்டர் நியமனம்*

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறையில் அட்டண்டர் பணிக்கான காத்திருப்போர் பட்டியலில் இருந்து 3 நபர்களுக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி பணி நியமன ஆணைகளை வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*அண்ணா*

பேரறிஞர் அண்ணா நினைவு நாளான இன்று புதுச்சேரியில், ஒதியஞ்சாலை சந்திப்பில் உள்ள அன்னாரின் சிலைக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன்-திரு பி ஆர் என் திருமுருகன், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம் ஆகியோரும் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். திமுக, அஇஅதிமுக, மதிமுக உள்ளிட்ட கட்சிகள் சார்பில் கட்சி நிர்வாகிகளும் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*பணியிட மாற்றம்*

புதுச்சேரியில், அரசு செயலர் திருமதி முத்தம்மா, பதவி உயர்வின் பேரில், ஆணையர் மற்றும் அரசுச் செயலராக மாற்றப்பட்டு திட்டமிடல்

மற்றும் ஆராய்ச்சி, ஆதிதிராவிடர் நலன் உள்ளிட்ட துறைகள் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தலைமை தேர்தல் அதிகாரியும், ஆணையர் மற்றும் அரசுச் செயலருமான திரு ஜவஹருக்கு கல்வி, தொழில்-வர்த்தகம் உள்ளிட்ட துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கனுக்கு, ஊரக வளர்ச்சி உள்ளிட்ட துறைகள் கூடுதல் பொறுப்புகளாக ஒதுக்கப்பட்டுள்ளன.

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணி கண்டன், புதுச்சேரியில் துணை நிலை ஆளுநரின் செயலராக மாற்றப்பட்டு, காரைக்கால் தெற்கு மாவட்ட வருவாய் பிரிவு துணை ஆட்சியர் திரு சோமசேகர் அப்பாராவ், காரைக்கால் மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுச்சேரி அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை இன்று வெளியிட்டுள்ள உத்தரவில், திரு சுந்தரேசன், திரு ஜெயந்த குமார் ரே, திரு நெடுஞ்செழியன், திரு கேசவன் ஆகிய ஐஏஎஸ் அதிகாரிகளின் பொறுப்புகளிலும் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

*நாராயணசாமி*

மருத்துவ மேற்படிப்பில் மாணவர் சேர்க்கை முழுவதும் மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் என்ற உச்சநீதிமன்றத்தின் உத்தரவினால் மாநில அரசுகளின் உரிமைகள் பறிபோகும் என்பதால், பழைய முறை தொடர, முதலமைச்சர் திரு ரங்கசாமி நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டும் என முன்னாள் முதலமைச்சர் திரு வி நாராயணசாமி கூறி உள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய பட்ஜெட்டில் புதுச்சேரிக்கு திட்டங்கள் இல்லாத நிலையிலும், முதலமைச்சர் பட்ஜெட்டை வரவேற்றுள்ளதாக, விமர்சனம் வெளியிட்டார். இந்தியா-இலங்கை மீனவர் பிரச்சனையில் மத்திய அரசு முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி இந்திய மீனவர்களை மீட்க வேண்டும் என, திரு நாராயணசாமி மேலும் கூறினார்.

*கிரிக்கெட்-பரிசு*

மலேசியாவில் நடைபெற்ற, 19-வயதிற்கு உட்பட்டவர்களுக்கான, ஐசிசி மகளிர் உலக கோப்பை 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற, இந்திய மகளிர் அணிக்கு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம், 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு அறிவித்துள்ளது. இந்திய மகளிர் கிரிக்கெட் அணியினர், 20 ஓவர் கிரிக்கெட்டில் உலக கோப்பை வெல்வது, இது 2-ஆவது முறையாகும்.

*பட்ஜெட்-மாநாடு*

மத்திய பட்ஜெட்டில் வேளாண்மை, சுகாதாரம், உள்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளின் தேவைகளுக்கும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சகத்தின் நிதி துறை செயலர் திரு துஹின் காந்தா தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் பட்ஜெட் பற்றிய, ஃபிக்கி மாநாட்டில் உரையாற்றிய அவர், மொபைல் தொலைபேசிகளின் உற்பத்தியில் இந்தியாவிற்கு கிடைத்துள்ள வெற்றியை தற்போது உலக நாடுகள் அங்கீகரித்து வருவதாகவும், இத்தகைய வெற்றிகளால் கிடைக்கும் உத்வேகத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுதல் அவசியம் என்றும் கூறினார். மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவர் திரு ரவி அகர்வால், மறைமுக வரிகள் மற்றும் சுங்கவரி வாரியத்தின் தலைவர் திரு சஞ்சய் குமார் அகர்வால் உள்ளிட்டவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

*செயற்கைகோள்*

கடந்த மாதம் 29-ஆம் தேதி ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட, NVS-2 செயற்கைகோளின் சுற்றுப்பாதையை அடுத்த உயரத்திற்கு மாற்றும் பணிகளில் நேற்று இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்ட போது, தொழில் நுட்ப கோளாறு ஏற்பட்டதாக, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. ஆயினும் செயற்கைகோள் ஆரோக்கியமாகவே இருப்பதாகவும், செயற்கைகோளை செயல் பாட்டிற்கு

கொண்டு வர, மாற்று உத்திகள் தயாரிக்கப் படுவதாகவும், இஸ்ரோ கூறி உள்ளது.

*உழவர்கரை*

உழவர்கரை நகராட்சிப் பகுதியில் சாலையில் சுற்றித் திரிந்த 116 மாடுகளை நகராட்சி ஊழியர்கள் பிடித்து. உரிமையாளர்களிடம் இருந்து சுமார் 2 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் அபராதம் வசூலித்து உள்ளனர். மாடு வளர்ப்போர் மாடுகளை சாலையில் திரிய விடாமல் சொந்த இடத்தில் வைத்து பராமரிக்க வேண்டுமென நகராட்சி நிர்வாகம் மீண்டும் அறிவுறுத்தி உள்ளது. நகராட்சி பகுதியில் இறுதி ஊர்வலங்களை நடத்துவோர் மலர்கள் மற்றும் மாலைகளை சாலையில் வீசுவதால் விபத்து ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, இறுதி ஊர்வலங்களின் போது மலர்கள் மற்றும் மாலைகளை சாலைகளில் வீசக் கூடாது என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

*புதிய கட்டிடம்*

புதுச்சேரியில் கலை-பண்பாட்டுத் துறையின் புதிய அலுவலக கட்டிடத்தை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாலை திறந்து வைக்கிறார். கடற்கரை சாலை காந்திசிலை எதிரே நடைபெறும் விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, பொதுப் பணித்துறை அமைச்சர்

திரு லட்சுமி நாராயணன், கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கிறார்கள்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாளை மறுநாள் நடைபெற உள்ள, 70 உறுப்பினர் டெல்லி சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது.

பிரயாக் ராஜ் மகா கும்பமேளாவில், இதுவரை 36 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர்.

வீராம்பட்டினம் பகுதியில் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி உள்ளிட்ட வசதிகளை அமைக்கும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

பாரதிதாசன் மகளிர் கல்லூரியில், முன்னாள் மாணவிகள் சங்கத்தின், இலவச காலை உணவு திட்டத்தை, உயர்கல்வி துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 03.02.2025/Script.

---------------------------